**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 237/2019**

பெயர் : அம்சவள்ளி P.W.1. Cross

க/பெ. : குருசாமி

தேதி : 06.10.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை: –**

1. 1ம் வாதி குருசாமி எனது கணவர் என்றால் சரிதான். எனக்கு 1986ம் ஆண்டு ஆவணி மாதம் 06ம் தேதி திருமணம் நடந்தது. 3 முதல் 5 வாதிகள் எனது மகன் மற்றும் மகள்கள் என்றால் சரிதான். எனது அனுபவத்தில் உள்ள தாவா சொத்தை யாரும் இடையூறு செய்யக்கூடாது என்றும், தாவா சொத்திற்குரிய நஷ்டஈட்டை 3 முதல் 5 பிரதிவாதிகள் எங்களுக்கு கொடுக்கவேண்டும் என்றும், 1,2 பிரதிவாதிகளுக்கு கொடுக்ககூடாது என்றும் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

2. தாவா சொத்து எங்குளுக்கு பாத்தியபட்டது என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ராமசாமி என்பவர் எனது கணவருக்கு எழுதிக்கொடுத்த கிரய ஒப்பந்தத்தை தாக்கல் செய்துள்ளேன். ராமசாமி என்பவர் எனது கணவருக்கு ஏற்படுத்திக்கொண்ட கிரய ஒப்பந்தம் பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து என்ன வகைப்பாட்டை சேர்ந்தது என்றால் புஞ்சை வகைப்பாட்டை சேர்ந்தாகும். அதன் புல எண். 298/A4, 298/B4, 298/C4, 298/D4, 298/E4 ஆகும். அதன் விஸ்தீரணம் 65.5 ஏர்ஸ் ஆகும். அது எத்தனை செண்ட், எத்தனை குழி என்று தெரியுமா என்றால் தெரியாது. நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி புல எண்கள் அனைத்தும் தனித்தனியாக உள்ளதா அல்லது ஒன்றாக உள்ளதா என்றால் ஒன்றாக உள்ளது. தாவா சொத்து தரிசாக உள்ளது என்றால் சரியல்ல. நான் கடலை மற்றும் உளுந்து பயில் செய்து வருகிறேன். தற்போது எதும் பயிர் செய்யவில்லை.

3. எனது கணவர் யாரிடம் எப்போது கிரய ஒப்பந்தம் செய்தார் என்றால் ராமசாமி என்பவரிடம் 01.04.1992 ல் கிரய ஒப்பந்தம் செய்தார். ராமசாமியின் தகப்பனார் பெயர் முருகையா பண்டாரம் ஆகும். மேற்படி கிரய ஒப்பந்தத்தில் யார்யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றும், யார் எழுதினார்கள் என்றும் தெரியுமா என்றால் தெரியாது. எவ்வளவு ரூபாய் பத்திரத்தில் கிரய ஒப்பந்தம் எழுதப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. பத்திரமானது கிரய ஒப்பந்தம் ஏற்பட்ட அன்று வாங்கப்பட்டதா

அல்லது அதற்கு முன்பு வாங்கப்பட்டதா என்று தெரியுமா என்றால் தெரியாது. கிரய ஒப்பந்தம் காலாவதியாவிட்டதாக எனது வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை.

4. கிரய ஒப்பந்தத்தின் படி எங்களுக்கு உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். வாசாஆ 1 ஆன ஆவணம் தாவா சொத்து ராமசாமி பண்டாரத்தின் தகப்பனார் முருகையா பண்டாரம் என்பவர் கிரய வாங்கிய ஆவணம் என்றால் சரிதான். வாசாஆ 1 ஆன ஆவணத்தில் சர்வே எண். 298ல் 1 ஏக்கர் 67 செண்ட் கிரயம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முருகையா பண்டாரத்திற்கு எத்தனை வாரிசுகள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முருகையா பண்டாரம் ராமசாமி பண்டாரத்திற்கு தாவா சொத்தை எழுதி வைத்ததற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

5. ராமசாமி பண்டாரத்திற்கு 1, 2 பிரதிவாதிகள் மகன்கள் என்றாலும், சுசீலா என்ற மகள் உள்ளார் என்றாலும் சரிதான். சுசீலாவை தரப்பினராக இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். வாசாஆ 2 ஆன ஆவணத்தில் ராமசாமிக்கு பூர்வீகமான சொத்தை கிரய செய்து கொடுப்பதாக கூறி கிரய ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் தாவா சொத்து ராமசாமியின் தனிப்பட்ட சொத்து இல்லை என்றால் சரியல்ல. ராமசாமி குடும்பத்தில் இதுவரை பாகப்பரிவினை ஏற்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை பொறுத்து ராமசாமி உயில், செட்டில்மெண்ட் போன்ற ஆவணங்கள் ஏதேனும் ஏற்படுத்தியுள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6. வாசாஆ 1 ஆனது தாவா சொத்தின் மூலபத்திரம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. வாசாஆ 6 ஆன ஆவணத்தின்படி பட்டா எண் 153 என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த பட்டாபடி புல எண். 298/4A ஆனது 0.36.50 ஏர்ஸ் ஆகவும், 298/4B ஆனது 0.7.00 ஏர்ஸ் ஆகவும், 298/4C ஆனது 0.600 ஏர்ஸ் ஆகவும், 298/4D ஆனது 0.10.00 ஏர்ஸ ஆகவும், 298/4E ஆனது 0.6.00 ஏர்ஸ் ஆகவும் பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ 2 ஆன கிரய ஒப்பந்தத்தில் புல எண். 298/4D ஆனது 0.10.00 ஏர்ஸ் மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிரய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற சர்வே எண்கள் தாவா சொத்திற்கானது அல்ல என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள புல எண்கள். 329–29B, 4Aல் 0.36.5 ஏர்ஸ், 323/4Bல் 0.07, 610–4cல் 0.06, 610/4E ல் 0.06 ஆகியவை வேறு இடத்தில் உள்ள

சொத்துகள் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு பக்கத்தில் உள்ளது. மேற்படி சொத்துகள் யார் பெயரில் பட்டா உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது.

7. கிரய ஒப்பந்தத்தில் குறிப்பிடபடாத புல எண்களை வழக்குரையில் குறிப்பிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் நாங்கள் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்க தக்கது அல்ல என்றால் சரியல்ல. ராமசாமி எப்போது இறந்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. ராமசாமி உயிருடன் இருந்த காலத்தில் கிரய ஒப்பந்தத்தை நிறைவேற்றி தரக்கோரி நாங்கள் எந்த அறிவிப்பும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இது நாள் வரையில் கிரய ஒப்பந்ததை நிறைவேற்றுவதற்கு நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. ராமசாமியின் வாரிசுகளிடம் கிரய ஒப்பந்தத்தை நிறைவேற்றி தரக்கோரி கேட்டுள்ளேன்.

8. 1ம் பிரதிவாதி கனகசபை எங்கள் ஊரிலேயே தபால்காரராக பணியாற்றி வந்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கும் 2ம் பிரதிவாதிக்கும் இடையே பாகப்பிரிவினை சம்பந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். அதனால் 2ம் பிரதிவாதி எனக்கு சாதகமாக உள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்து ராமசாமியின் குடும்ப பூர்வீக சொத்து என்பதால் அது குறித்து கிரய ஒப்பந்தம் செய்து தர அவருக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தேசிய நெடுஞ்சாலை 47ன் படி சாலைகள் தாவா சொத்து உள்ள பகுதியில் அகலப்படுத்திக்கொண்டு வருகிறார்கள் என்றால் சரிதான். சொத்து யாருக்கு பாத்தியப்பட்டதாக உள்ளதோ அவர்களுக்கு தான் மத்திய மற்றும் மாநில அரசு நஷ்டஈடு கொடுக்கும் என்றால் சரிதான். நான் தாவா சொத்தை ரூ. 22,540/-க்கு கிரயம் பெற்று எனது அனுபவத்தில் 1992 முதல் வைத்து வருவதால் தாவா சொத்திற்கான நஷ்டஈடு எனக்கு தான் கொடுக்கபடவேண்டும். தாவா சொத்தில் ஒரு பகுதியை நில ஆர்ஜிதம் செய்யப்போவதாக செய்திதாளில் செய்தி வெளியிடப்பட்டது என்றால் சரிதான். அந்த செய்தி தாள் விளம்பரத்தில் சொத்தின் உரிமையாளர் என்று எனது பெயர் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான்.

9. எனது கணவர் 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு தான் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பு சொத்துரிமை மாற்று சட்டம் பிரிவு 53 A படி எனக்கு அனுபவம் மற்றும் உரிமை உள்ளது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாசாஆ 2 ஆனது பதிவு செய்யபடவில்லை என்றால் சரிதான். பதிவு செய்யப்படாத ராமசாமி எழுதிக்கொடுத்ததாக மோசடியாக தயார் செய்த கிரய ஒப்பந்தத்தின் அடிப்படையில் நாங்கள் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்க தக்கது அல்ல என்றால் சரியல்ல. வாசாஆ 2 ஆன ஆவணத்தில் மொத்த கிரய தொகை ரூ.22,545/-

என்றும், கிரய ஒப்பந்த தேதியன்று ரூ.15,000/- கொடுத்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிரய பாக்கி தொகையான ரூ.7,545/- ஐ 15.04.1992 அன்று 2ம் பிரதிவாதியிடம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி மேற்படி விபரங்கள் குறித்து சாட்சியம் அளிப்பாரா என்றால் சாட்சியம் அளிப்பார். வாசாஆ 2 ல் உள்ள மேலெழுத்தில் ராமசாமியிடம் சாட்சி கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். அவர் இறந்துவிட்டதால் வாங்கவில்லை. ராமசாமி கடந்த 10.12.2005ல் தான் இறந்தார் என்றாலும், நாங்கள் மோசடியாக மேற்படி ஆவணத்தை தயார் செய்ததால் தான் அதில் ராமசாமி என்பவரிடம் சாட்சி கையொப்பம் பெறவில்லை என்றாலும் சரியல்ல.

10. வழக்குரையில் கண்ட அனைத்து சொத்துகளை பொறுத்தும் ராமசாமி எனது கணவருக்கு எந்த கிரய ஒப்பந்தமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி கிரய ஒப்பந்தத்தின் அடிப்படையில் ராமசாமி எனது கணவரிடமிருந்து எந்த தொகையும் பெறவில்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி எனது உறவினரா என்றால் இல்லை. நான் 1ம் பிரதிவாதிக்கும் 2ம் பிரதிவாதிக்கும் இடையில் உள்ள விரோதத்தின் அடிப்படையில் 2ம் பிரதிவாதியின் துணையுடன் மோசடியாக பத்திரம் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாசாஆ 3 ஆன ஆவணம் வழக்கிற்காக மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் நாங்கள் வழக்குரையில் கோரியுள்ள எந்த பரிகாரமும் எங்களுக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது கணவர் தாக்கல் செய்த பொய்யான வழக்கிற்கு நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

11. நில உரிமையாளரான ராமசாமியின் வாரிசுகளுக்கு கிடைக்க வேண்டிய நஷ்டஈட்டை தடை செய்ய எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரி தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. இழப்பீட்டு தொகை எவ்வளவு என்று அருதியிட்டு கூறாமல் தவறான தொகையை குறிப்பிட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. தாவா சொத்து உண்மையிலேயே எங்களது வசத்தில் இருந்தால் அதன் நான்கெல்லைகள் எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல.